1992 செப்டம்பர் 21]

17—

தவளப்பட்டியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

*9562—திரு. வெ. தமிழரசு:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் மலைவாழ் மக்களுக்கு வசதியாக தவளப்பட்டியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் தவளப்பட்டி யில் கறவை மாடுகள் மற்றும் பால் உற்பத்தி மிகக் குறைவாக உள்ளதால் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 11–00

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவளப்பட்டியில் கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு கடுமையான வறட்சியால் தீவனங்கள் இல்லாததால் கறவை மாடுகளை அப்பகுதி மலைவாழ் மக்கள் விற்று விட்டனர். ஆனால், தற்போது நமது இதய தெய்வம் தெய்வத்தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சியில் நல்ல மழை யினால் நிறைய பச்சைத் தீவனங்கள் கிடைப்பதால் பால் சொசைட்டி ஏற்படுத்துகின்ற அளவிற்குக் கறவை மாடுகளை அப்பகுதி மக்கள் வைத்திருக்கின்றனர். எனவே, இந்த ஆண்டு ஏற்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் அதிக அளவில் மாடுகள் வாங்கி, போதிய அளவுக்குப் பால் உற்பத்தி செய்யத் துவங்கிய பின்னர், தனியான ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.